பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 30 புதன்கிழமை 12.06.2024 கதிர் 217

# 13இன் அமுலாக்கத்திற்காக உடன் வட்டமேசை மாநாட்டைக் கூட்டுக

## சாதக சூழல் தோன்றியுள்ளது என்கிறார் கரு ஜெயசூரிய

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து அரசியல் தலைவர்களும், புலம்பெயர்தமிழர்களும்சாதக மான நிலைப்பாட்டை வெளிப் படுத்தியுள்ள நிலையில் தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக்கூட்டிதீர்வினை எட்டுமாறு மூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும்,முன்னாள்சபாநாயக** ☞2

## இது ரகசியம் அல்ல!

சிங்கள அரசியலாளர்களின் வழக்கத்திற்குத் தானும் விதிவிலக்கல்ல என்பதை சஜித் நிரூபித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களைச் சந்தித்த பின்னர், காணி பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பியபோது, தான் 13 மைனஸ் அல்லது பிளஸ் குறித்துப் பேசவில்லை அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 13இனை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்றார்.

ஆனால், நேற்றுப் பகல் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார், சஜித் முழுமையானபொலிஸ்அதிகாரங்கள் குறித்துப் பேசவில்லை என்று அடித்துக் கூறினார். சமூகப் பொலிஸ் சுற்றுச்சூழல் பொலிஸ் போன்ற ஒன்றுக்கும்பயனில்லாததுறைகளை மாகாண சபைகளுக்கு வழங்குவது குறித்துத்தான்சஜித்யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்டார் என்று மரிக்கார் ☞2

## விஜயதாசவுக்கான தடை மீள நீடிப்பு

சுதந்திரக் கட்சியின் தவிசாளராக விஜேதாச ராஜபக்ச செயற்படுவதைத் தடுத்து விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையுத்தரவு ஜூன் 25 வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொருளாளர் லசந்த அழகியவண்ணவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விஜேதாச ராஜபக்ஷ கட்சியின் உறுப்பினராக செயற்படுவதற்கும் இந்த இடைக்கால தடையுத்தரவில் உத்தரவிடப்பட்டுள்ளது. ☞2

## ஆசிரியர்கள் போராட்டம் இன்று முதல் தொடக்கம்

சம்பளநெருக்கடியை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தயாராகியுள்ளன.

இதன்முதற்கட்டமாக இன்று முதல் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

இதற்கு இணையாக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான மதிப்பீட்டுப் ☞2

## தேர்தல் அறிக்கைகளின் பின்பே தமிழ் அரசுக் கட்சி இறுதி முடிவு

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுமந்திரன் தெரிவிப்பு

13 ஆம் திருத்தச் சட்டத்திலுள்ள மாகாண சபை முறைமை தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையாது என்பதை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக் கொண்டுள்ளது எனவும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல்அறிக்கைவெளியான பின்னரே தமிழரசுக் கட்சி இறுதி முடிவு எடுக்கும் எனவும்இலங்கைதமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழுவினருக்கும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கட்சியின் ☞2

## சம்பள முரண்களை தீர்க்க நிபுணர்கள் குழு நியமனம்

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளைநிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

முன்னாள்ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்னவின் தலைமையிலான இந்தக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.டி.ஜே. நிலுக்ஷன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹிரன்சா களுதந்திரி, ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ். ஆலோக பண்டார, நிறுவன பணிப்பாளர் நாயகம் எச்.ஏ. சந்தனகுமாரசிங்க, வைத்தியர் டெரன்ஸ் காமினிடிசில்வா, துமிந்த ஒஹலங்கமுவ, சந்தி எச்.

## தேர்தலை ஒத்திவைப்பது முட்டாள்தனமான முடிவு

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலைஒத்திவைப்பது முட்டாள்தனமான முடிவு என்று பொது ஜன பெரமுனவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பதுளையில் நேற்றைதினம் நடைபெற்ற நிகழ்வொன்றின்பின்னர் ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை ஒரு வருடத்தால் நீடிப்பது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அரசமைப்புக்கு அமைவாகத் தேர்தலொன்றை நடத்தாது இருக்கமுடியாதல்லவா. தேர்தலை ஒத்திவைக்கின்ற முட்டாள்தனமான ☞8

## ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஒரு வருடம் அதிகரிக்க முடியாது

### பவ்ரல் அமைப்பின் தலைவர் கருத்து

அரசமைப்பின்19ஆம் திருத்தத்துக்கு அமைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்களுக்கு மேல் அதிகரிக்க முடியாது. அதன் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் உரியக் காலத்தில் நடத்தப்பட வேண்டும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பவ்ரல் அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம் மக்கள் ஆணை இன்றி, நாட்டின் ஜனாதிபதிக்கு 5 வருடங்களுக்குஅப்பால் சென்று ஜனாதிபதி பதவியைவகிக்கச்சட்டரீதியிலான அனுமதி ☞2

## மாகாண சபைக்கு அப்பால் செல்வது அரசியல் தீர்வைக் காண அவசியம்

### தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுர யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

தமிழ்மக்களுக்கான அரசியல்தீர்வுஒன்றுக்கு மாகாண சபை முறைமைக்கு அப்பாற் செல்வது அவசியம் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னரேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

அரசமைப்பு ரீதியான மாற்றம் தேவைப்படுகின்றது. அது மட்டுமல்ல தற்போது அரசமைப்பு ரீதியாக ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தினை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

சிலவிடயங்கள்சட்டத்துக்கும்அரசமைப்புக்கும் மாத்திரம் மட்டப்படுத்தப்பட்டுள்ளன. அரசமைப்புக்கு அப்பால் சென்று அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கானதிட்டங் ☞2

## தமிழ் பொது வேட்பாளர் இல்லையேல்

# ஜனாதிபதித் தேர்தலில் நான் மீண்டும் போட்டியிடுவேன்

### சிவாஜிலிங்கம் நேற்று அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தான் மீண்டும் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் தான் மீண்டும்போட்டியிடுவது நிச்சயம் என்றார் அவர்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச்சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்பொது வேட்பாளரை நிறுத்துவதற்குத் தற்போது முயற்சி முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இம்முறை மக்கள் மத்தியிலும் பொது ☞8

## மாகாண சபைக்கு முழு பொலிஸ் அதிகாரம் வழங்குவது குறித்து சஜித் சொல்லவில்லை

### இப்படி தலைகீழாக விளக்கமளிக்கிறார் மரிக்கார்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் முழுமையான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கவில்லைஎன்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார். சமூகப் பொலிஸ் துறை அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதையே சஜித் தெரிவித்தார் என்றும் மரிக்கார் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி ☞2

## மன்னார் காற்றாலை திட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் மனு

### மன்னார் ஆயர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தாக்கல்

மன்னார்காற்றாலை மின்உற்பத்திதிட்டத்திற்கு எதிராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் உயர் நீதிமன்றத்தில்அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல்ஆர்வலர்களான ரொஹான் பெத்தியாகொட, பேராசிரியர் நிமல் குணதிலக்க, பேராசிரியர் சரத் கொட்டகம மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் இந்த அடிப்படை உரிமை மனுவைநேற்றுதாக்கல் செய்தனர்.

மன்னாரில் ☞8

## இனி இது .....

தெரிவித்தார்.

சஜித்தின் சம்மதன் இன்றி மரிக்கார் கொழும்பில் இப்படி ஒரு விளக்கத்தை வழங்கியிருக்க முடியாது. இது ஒன்றும் மரிக்காரின் தான் தோன்றித்தனமான செயற்பாடாக இருக்க முடியாது. ஒருவேளை அப்படியே இருந்திருந்தாலும் அவரது கருத்து வெளியான உடனேயே சஜித் அதனை மறுத்து தனது தெளிவான நிலைப்பாட்டை, தீர்க்கமானமுடிவைமுழுநாட்டுக்கும் தெளிவுபடுத்தியிருக்கவேண்டும்.

அதைவிடுத்து, முழுமையான பொலிஸ்அதிகாரங்கள்குறிதத அவரது கருத்து வெளியானதுமே தெற்கில் அதற்கெதிராக ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட மற்றைய கட்சிகள் தயாராகி வருவதான தகவல்களைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாத மனோநிலையைத் திருப்திப்படுத்தும் வகையில் சஜித் கூறியது முழுமையான பொலிஸ் அதிகாரங்கள் அல்ல என்று விளக்கமளித்திருப்பது பச்சோந்தித்தனமானது, மிகக் கேவலமானது. இதுதான் இலங்கை வரலாறு முழுவதும் சிங்களத் தலைவர்களால்வெளிப்படுத்தப்பட்டு வந்த செல்நெறி.

தமிழ்மக்களின்வாக்குகளுக்காக தமிழர்களுக்கு ஒரு கதையும் சிங்கள வாக்குகளுக்காக சிங்களவர்களுக்கு ஒரு கதையும் என்று கூறிகூறியே சிங்களத் தலைவர்கள் இதுநாள்வரை இந்த நாட்டைச் சீரழித்து வந்திருக்கிறார்கள். அதன் விளைவுகளை அவர்கள் நன்கு அனுபவித்து உணர்ந்தன் பின்னரும்அவர்கள்திருந்தவில்லை என்பதையே சஜித்தின் இந்தச் செயல் உணர்த்துகின்றது.

சஜித்துடன் நிற்கும் முன்னாள் ஊடகவியலாளர்உமாசந்திரபிரகாஸ் போன்றவர்கள் இது குறித்து சஜித்திடம் எடுத்துக்கூறவேண்டும். இதுபோன்றஏமாற்றுவேலைகளை நம்பி அவருக்கு வாக்களிக்க இனியொருபோதும் தமிழ் மக்கள் தயாராக இருக்கமாட்டார்கள் என்பதைத்தெளிவுபடுத்தவேண்டும். தான் குறிப்பிட்டது முழுமையான பொலிஸ் அதிகாரம் தான் என்பதை அவர் சிங்கள மக்களிடம் தெளிவுபடுத்தவில்லை என்றால் அவருக்கு தமிழர்களின் வாக்குகள் கிடைப்பதைத் தமிழர் தரப்பிலுள்ள பல சக்திகளும் ஒன்று திரண்டு எதிர்க்கும் என்பது நிச்சயம்.

அவருடன் ஒப்பிடும்போது ஜேவிபியினரின் போக்கு குறிப்பிடத் தகுந்தது. தமிழ் அரசுக்கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் அவர்கள்ஒருவிடயத்தைத்தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இனப்பிரச்சினைக்குபுதியஅரசமைப்புமூலமே தீர்வு காணமுடியும். அதேநேரம், புதிய அரசமைப்பை ஏற்படுத்தும் வரைக்கும் அரசமைப்பின் 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்என்பதே அவர்களின் நிலைப்பாடு. இது இப்போதைய நிலைப்பாடு அல்ல, 2019ஜனாதிபதித்தேர்தலின்போதே, தேர்தல் அறிக்கையிலேயே தாம் இந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

வடக்குகிழக்குமாகாணங்களைப் பிரித்தது, போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு படையினரை ஆள்திரட்டிக் கொடுத்தது, போ-ருக்கு முழு ஆதரவு வழங்கியது என்று தமிழர்களுக்கு எதிரான பலவற்றையும் ஜேவிபி செய்திருந்தாலும், அவற்றைத் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான தமது தகுதியாக ஜேவிபியின் பல அரசியலாளர்கள் தெற்கில் தூக்கிப் பிடித்தாலும் குறைந்தபட்சம் அரசியல் தீர்வு விடயத்தில் தமது நிலைப்பாடு எது என்பதை சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்குவெளிப்படுத்துவதிலாவது அவர்கள் முன்னேற்றகரமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள் என்பது வரவேற்கத்தக்கது.

தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கிறார்களோ இல்லையோ அரசியல் பச்சோந்தித்தனம் இல்லாமல் அவர்கள் நேர்மையோடு இருப்பதைப் பாராட்டியே ஆகவேண்டும். பதிலாக 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலே கூட சிங்களப் பேரினவாத எதிர்ப்பைக் கண்டு அஞ்சி நடுங்கும் ரணில், சஜித் போன்றவர்கள் தமிழர்களுக்குத் தீர்வைத் தருவார்கள் என்று எதிர்பார்ப்பது கானல்நீர்தான்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## 13இன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமான கருஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மற்றும் தெற்கில் பரஸ்பர நம்பிக்கையைஏற்படுத்தவும், இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கும், அனைத்து பிரஜைகளுக்கும் கண்ணியத்துடன் வாழக்கூடிய உரிமையை வழங்குவதும், இந்த பிரச்சனைகளை எதிர்கால தலைமுறைகளுக்கு விட்டு வைக்காமல் இருப்பதும் எமக்குள்ள பெரும் கடமையாகும்.

ஆகையால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான தலையீட்டை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் மேற்கொள்ளவேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் 9 ஆவது நாடாளுமன்றத்தின் கால எல்லை தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினருக்கும், ஒட்டுமொத்த எதிர்க்கட்சிக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதின் முக்கியத்துவம் தொடர்பில்அண்மையில்எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாகக் கருத்து தெரிவித்துள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போது நாடாளுமன்றத்தில் சுயேச்சையாக செயற்பட்டு வரும் அதிகஅளவிலான உறுப்பினர்களும் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட எண்ணி இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களும் இந்தக் கருத்தில் உறுதியாக இருப்பது எமக்குத் தெரியும்.

இது போன்ற முற்போக்கான அபிலாஷைகள் பாராட்டபடவேண்டும்.இந்தஅனைத்துவிடயங்களையும் கருத்தில் கொள்கையில் தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி இவ்விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறோம்.

தமிழ்புலம்பெயர்ந்ததரப்பினரில் குறிப்பிடத்தக்க குழுவினர் இதற்கு ஆதரவு தெரிவித்து இருப்பதும் பாராட்டப்படவேண்டியவிடயமாகும். இவ்விடயத்திற்குநாட்டின் முதன்மை தரப்புகள் ஆதரவு தெரிவித்திருப்பது பாராட்டத்தக்கது.

இந்த பேச்சுகளைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கான கடமை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு போன்றே அனைத்து கட்சிகளுக்கும் உள்ளது. குறுகிய அரசியல்காரணங்களுக்காக இந்தச்சந்தர்ப்பத்தைநழுவவிட்டால் துரோகிகள்ன என்று எதிர்கால சந்ததியினர் எம்மைக் குற்றச்சாட்ட வழி வகுக்கும். ஆகையால் ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் உன்னத நோக்கத்துடன் இது விடயத்தில் தலையிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

## விஜயதாசவுக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைக்க கால அவகாசம் வழங்குமாறு, மனுவின் பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம், இதற்கான கால அவகாசத்தை வழங்கி இடைக்காலத் தடையுத்தரவை ஜூன் 25 ஆம் திகதி வரை நீடித்து

## ஆசிரியர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளிலிருந்து இன்று மாலை முதல் விலகவுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப்ஸ்டாலின் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:

நாளை (இன்று) அதிபர்கள், ஆசிரிய ஆலோசர்கள், ஆசிரியர்கள் நாடாளவிய ரீதியில் வலயக் கல்வி பணிமனைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளோம்.

க.பொ.த. சாதரண தர பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் நிலையங்கள்101காணப்படுகின்றன. அங்கு விடைத்தாள் திருத்தப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் அப்பணியை கைவிட்டு போராட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். அதுதொடர்பிலான அறிவிப்பை நாம் பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளோம் என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைவகுப்பது முக்கியமானதாகும். அது தொடர்பாக நாம் விரிவாகக் கலந்துரையாடினோம். எதிர்காலம் தொடர்பான சிறந்த சிந்தனை எம் அனைவருக்கும் உள்ளது.

மாகாண சபை என்பது அதிகாரப் பரவலாக்கம். எனவே நடைமுறைப்படுத்தப்படாத மாகாண சபை முறைமை சம்பந்தமாக இருதரப்பினரும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டோம். அதேபோன்று மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவதால் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். எனவே அதற்கு அப்பால்சென்ற செயற்பாடொன்று அவசியமாகும்.

அரசமைப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவே தேசிய ஐக்கியத்தினை ஏற்படுத்த முடியும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் - என்றார்.

இணைந்திருந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரித்தது, போருக்கு ஆட்களைச் சேர்த்துக் கொடுத்தது போன்ற தமிழர்களுக்குஎதிரானசெயல்களை ஜேவிபி கடந்த காலங்களில் செய்திருக்கிறதேஎன்றுசெய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியதற்கு, வரலாற்றில் ஒவ்வொருவருக்கும் இவ்வாறான வரலாறுகள் உள்ளன. அவை தொடர்பல் சிந்தித்துக்கொண்டு இருப்பதா இல்லை எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பதா என்பதையே நாம் இப்போது தீர்மானிக்கவேண்டும். வரலாறு தொடர்பில் சிந்தித்துக் கொண்டிருந்தால் சிறந்த எதிர்காலத்தினை உருவாக்க முடியாது - என்றார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிற்கு ஒரு சட்டமும், தெற்கிற்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது என்றும், முழு நாட்டுக்கும் ஒரே சட்டம் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கான நியாயத்தை வழங்க வேண்டும் என்று தான் எதிர்க்கட்சிதலைவர் சஜித்பிரேமதாச குறிப்பிட்டிருந்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்போது சமூக பொலிஸ் போன்றவற்றை மாகாண சபைகளுக்கு வழங்குவதில் சிக்கல் இல்லை. பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளில் பெரும்பாலானவை மாகாணசபைகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. உள்ளுராட்சி நிறுவனங்கள் அனைத்தும்கூட மாகாண சபைகளின் கீழேயே உள்ளன. அவர் கூறியதன் அர்த்தமும் இதுவே. அதனை விடுத்து பொலிஸ் அதிகாரம் முற்றாக வழங்கப்படும் என்பதல்ல.

அவ்வாறெனில் தற்போதுள்ளதுடன் சில விடயங்கள் இணையும். அந்த வகையில் சமூக பொலிஸ் மற்றும் சுற்றாடல் பொலிஸ் என்பவற்றை வழங்குவதில் சிக்கல் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். ஆனால் நான் இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரிடம் எதனையும் கேட்கவில்லை. வடக்கு மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். வடக்கு மாணவர்களுக்கும் தெற்கிலுள்ள மாணவர்களைப் போன்றே கல்வி கற்பதற்கு உரிமையுள்ளது.

அதேபோன்று அவர்களது அடிப்படைஉரிமைகளைஅபிவிருத்தி செய்வதற்கான உரிமையும் இருக்கிறது. அவர்களுக்கானதொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். அனைவருக்கும் அரச உத்தியோகத்தை வழங்க முடியாது. ஆனால் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும். வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்காமல், ஏற்றுமதி பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியாது.

எனவே வடக்கு மக்களுக்கும் இலங்கை பிரஜைகள் என்ற ரீதியில் ஏனைய மக்கள் அனுபவிக்கும் சகல வசதிகளையும் அனுபவிப்பதற்கான உரிமை உள்ளது. ஆனால் அவற்றை எமது நாட்டு ஆளும் தரப்புகள் வழங்கவில்லை. ஐ.தே.க. ஆட்சியோ பொதுஜன பெரமுன ஆட்சியோ அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவேதான் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவற்றை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை.

அரசமைப்பின் 83ஆவது உறுப்புரிமைக்கு அமைய, ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6வருடங்களுக்கு அதிக காலத்துக்கு அதிகரித்துக் கொள்வது என்றால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்களிப்புக்குச் செல்லவேண்டும். ஆனால் அரசமைப்பின் 19ஆம் திருத்தத்தின்போது எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயம்தான், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தவணைக்கு மட்டுப்படுத்துவது மற்றும் ஒரு தவணைக்கு இருந்த 6 வருட காலத்தை 5 வருடமாகக் குறைப்பதாகும்.

அதன் பிரகாரம் 19ஆம் திருத்தத்துக்குப் பின்னர் நாட்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி 5 வருடங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுக்கு வந்திருக்கிறது. அதனால் எந்தவகையிலும் 5வருடங்களுக்கு அதிக காலத்துக்கு ஜனாதிபதிப் பதவியை கொண்டு செல்ல முடியாது.

அத்துடன் அரசமைப்பின் 40ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ள சந்தர்ப்பத்தில், அதற்காக பதில் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டால், அவ்வாறு நியமிக்கப்படும் ஜனாதிபதிக்கு, ஜனாதிபதியாக பதவி வகித்த நபரின் பதவிக் காலம் முடிவடையும் வரைக்குமே பதில் ஜனாதிபதிக்கு பதவி வகிக்க முடியும்.

அதன் பிரகாரம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த எஞ்சிய காலப்பகுதி வரைக்குமே ஜனாதிபதிப் பதவியை வகிக்க முடியும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ஒருவருக்கு 5 வருடங்களுக்காக வழங்கப்பட்ட மக்கள் ஆணையை 6 வருடங்களுக்குக் கொண்டு செல்ல எந்தவழியும் இல்லை. அரசமைப்பை எந்த அர்த்தத்தில் ஆராய்ந்து பார்த்தாலும் அதேபோன்ற நீதிமன்றத் தீர்ப்புக்களைப் பார்த்தாலும் தற்போதுள்ள ஜனாதிபதிக்கு, கோட்டாபய ராஜபக்ச பதவி வகித்தது போக எஞ்சியுள்ள காலம் மாத்திரமே கிட்டும். அதனால் ஆளும் தரப்பு ஜனநாயக முறையில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் என நாங்கள் நம்புகிறோம். எனவே ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது கட்டாயமாகும் என்றார்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கட்சியின் மூத்த உறுப்பினர்களான சி.வி.கே.சிவஞானம், எஸ்.குலநாயகம், ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நண்பகல் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பிலே ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப்பேச்சுக்களில்எல்லாப்பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கண்டு விடவில்லை. ஆரம்ப கலந்துரையாடல் என்ற போர்வையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் வகையிலான கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

இடதுசாரி இயக்கம் என்ற வகையில்அவர்களுடன்எங்களுக்கு இணங்கிச் செல்லக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஊழல் ஒழிப்பு, மக்கள் மத்தியில் சம உரிமை என்ற பல விடயங்களிலும் பொருளாதார சமத்துவத்திலும் நேரடியாகவே இணங்கக்கூடியதாக இருந்தது.

தமிழ்த்தேசியப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் பல ஏற்றத் தாழ்வுகள் பழைய சரித்திரங்கள் இருந்தாலும்கூட, அனுரகுமார கூறியது போன்று தற்போது இருக்கின்ற மாகாண சபை முறைமையை அப்படியே ஏற்றுக் கொள்வதாகவும் அதனை நடைமுறைப்படுத்துவதாகவும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஆனால் இந்த 13ஆம் திருத்தச் சட்டத்திலுள்ள மாகாண சபை முறைமை தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு அல்ல என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

இதில் இருந்து முன்னேறிச் செல்வதற்கான வழிவகைகளை இரு தரப்பாகவும் இணைந்து பேசி முன்கொண்டு செல்லவேண்டும் என்பது இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அப்பால் ஜனாதிபதித் தேர்தலுக்கான தாங்கள் தேர்தல் அறிக்கையை வெளியிடுவார்கள். அதன் பின்னர் அவர்களுடன் நடத்தப்படுகின்ற பேச்சுக்களை அடிப்படையாக வைத்து இலங்கை தமிழரசுக் கட்சி உரிய நேரத்தில் முடிவுகளை எடுக்கும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால் இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கல்

## மல்லாவி வைத்தியசாலைக்கும்





(வி.ஜெனன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் கனடா செந்தில் குமரன் நிவாரண நிதியத்தால் ஞாயிற்றுக்கிழமை மாலை வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு மல்லாவி ஆதார வைத்தியசாலையின் சிறுநீரக சிகிச்சை பிரிவு கட்டடத் தொகுதியில் இடம்பெற்றிருந்தது. இதன்போது கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 3,367,000 செலவில் இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன. மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் தேஷாஞ்ஜலி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுநீரக மருத்துவ ஆலோசகர் வைத்தியர் பிரம்மா சு.தங்கராசா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கையளிப்பு நிகழ்வில் செந்தில் குமரன் நிவாரண நிதிய பொறுப்பாளர் வழங்கி வைத்தார் மேலும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரன, சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர்.மு.உமாஷங்கர், செந்தில்குமரன் நிவாரண நிறுவன ஸ்தாபகர் டி.செந்தில்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். நிகழ்வில் முன்னைநாள் மல்லாவி வைத்திய அதிகாரிகள், மாவட்ட வைத்தியர்கள் , தாதிய உததியோகத்தர்கள், பணியாளர்கள் சமூக சேவகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# சாய்ந்தமருது மல்ஹறுஸ் ஸம்ஸ் மகாவித்தி சாதனை மாணவிகள் கௌரவிப்பு நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருதுகமுஃகமுஃமல்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய சாதனையாளர்கள் கௌரவிப்பும், விசேட காலை ஆராதனையும் திங்கட்கிழமை பாடசாலை அதிபர் எம்.எஸ். நபார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது அண்மையில் வெளியான உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக உள்நுழைவுக்கு தகுதி பெற்ற எம்.ஜே. சுஜானா வேகம், ஏ.ஜே.எப். ருஷ்ணிதா மனால், எஸ்.எப் முனாசா ஆகிய மூன்று மாணவிகளும் அவர்களின் பெற்றோர் சகிதம் பாடசாலை சமூகத்தினரால் மாலை அணிவிக்கப்பட்டு சக மாணவர்களின் பெரும் வரவேற்புடன் அழைத்து வரப்பட்டு அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச். றியாசா, பிரதான அதிதியாக கலந்து கொண்டு மாணவிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் ஏனைய மாணவர்களுக்கும் கல்விசார் சிறப்புரை நிகழ்த்தினார். மேலும் இந்நிகழ்வில் ஆசிரிய ஆலோசகர் ஏ.றாஸிக், நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்த தொழிலதிபர் எஸ். எச்.எம். ஜிப்ரி, பாடசாலை பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்விசாரா போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிழக்கு ஆசிரியர் நியமனங்கள் நிறுத்தப்பட்டமை துரதிர்ஷ்டம்

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்விசார் நியமனங்களிலும், கல்வி அதிகாரிகள் நியமனங்களிலும் பல பாரபட்சங்கள் இடம்பெறுகின்றன என அறிகிறோம். இது போன்று பல இடங்களிலும் பல்வேறு அசௌகரியங்கள், பாரபட்சங்கள் இடம்பெறுகின்றன.

எமது நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவற்றை மேன்முறையீடு செய்யவும் விரைவான தீர்வுகளை பெறவும் 'சிறுபான்மை இன நலன் ஆணைக்குழு' ஒன்றை நிறுவ அரசமைப்பு ரீதியாக ஏற்பாட்டை செய்ய வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் சபையில் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

இப்படியான ஏற்பாடுகள் இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ளன. எமது நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் நலன் கருதி 'சிறுபாண்மை இன நலன் ஆணைக்குழு' ஒன்றை நிறுவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முன்வர வேண்டும். .மேலும், மிக நீண்ட கால கோரிக்கையாக இருந்து வரும் பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தை உருவாக்கித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரவை அனுமதியுடன் மாகாண சபைகளினூடாக ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வரும் கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணத்தில் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அண்மையில் கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்ததும் துரதிஷ்டமாக அந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கூடுதலான ஆசிரியர்களை கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். (05)





# புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்திற்கான விழிப்புணர்வு நிகழ்வு

*(பாறுக் ஷிஹான்)*

*2024ஆம் ஆண்டின் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத்தினத்தை முன் னிட்டு புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் வலுவான தேசத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளின் கீழ் விழிப்புணர்வு கருத்தரங்கு கல்முனை பிரதேச செயலக மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.*

*மேற்படி நிகழ்வு தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம் .சாலிஹ் தலைமையில் நடைபெற்றதுடன் இதன் போது பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.*

*மேலும் இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக மகா சங்க சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் நைனா முஹம்மது நௌசாட் பிரதான வளவாளராகக் கலந்துகொண்டு மக்களுக்கு சிறந்த விளக்கங்களை வழங்கியிருந்தார்.*

*அத்துடன் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மூன்று சமுர்த்தி வங்கி வலயங்களில் கல்முனை சமுர்த்தி வங்கி வலயம் கடந்த 2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரத்தில் அதிகபடியான கொடி விற்பனை செய்து முதலாம் இடத்தை பெற்று கொண்டவர்கள் உள்ளிட்ட வங்கி முகாமையாளர் , பிரதி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெறும் கனவு

தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான சூழலில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வட்டமேசை மாநாடு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும்படி முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியிருக்கிறார்.

வேடிக்கை என்னவென்றால், பிளஸ்ஸோ மைனஸோ இன்றி 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று யாழ்ப்பாணத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்தை அவரது கட்சி மறுத்து காவல்துறை அதிகாரத்தில் ஒரு பகுதியைத்தான் தருவதாக அவர் கூறினார் என்று விளக்கமளித்த தினத்தில்தான் கரு ஜெயசூரியவின் இந்த அறிக்கையும் வெளியாகி இருக்கின்றது.

“13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதின் முக்கியத்துவம் தொடர்பில் அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாகக் கருத்து தெரிவித்துள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ச ஆகியோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போது நாடாளுமன்றத்தில் சுயேச்சையாக செயற்பட்டுவரும் அதிக அளவிலான உறுப்பினர்களும் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட எண்ணி இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களும் இந்தக் கருத்தில் உறுதியாக இருப்பது எமக்குத் தெரியும்.

இது போன்ற முற்போக்கான அபிலாஷைகள் பாராட்டபட வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொள்கையில் தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி இவ்விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறோம்'' என்று கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தீவிர அரசியல் செயற்பாட்டில் இருந்து விலகி, இன நல்லிணக்க முயற்சிகளில் கவனம் செலுத்தி வரும் கரு ஜெயசூரிய தனது சக அரசியலாளர்கள் திருந்திவிட்டார்கள் என்று நினைத்து இந்த அறிக்கையை முன்வைத்திருக்கக்கூடும். அல்லது தனது கட்சியைச் சேர்ந்தவரான ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றிபெறுவதற்குச் சாதகமான சூழலை ஏற்படுத்த, தேர்தலுக்கு முன்பாக 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவருக்குச் சாதகமாக அமையக்கூடும் என்ற கருத்திலும் இந்த யோசனையை முன்வைத்திருக்கக்கூடும். எப்படியாக இருந்தாலும் தன சக அரசியலாளர்கள் தமது சுயநல வாக்கு வேட்டை அரசியலைக் கைவிட்டு இதுபோன்ற விடயங்களில் நேர்மையுடன் செயற்படுவார்கள் என்று நம்பிய அவரது நெஞ்சுரத்தைப் பாராட்டத்தான் வேண்டும். கள யதார்த்தம் அப்படியில்லை என்பதை அவர் விரைவில் உணர்ந்துகொள்வார்.

இத்தனை அனுபவப் பாடங்களின் பின்னரும் இல்கையின் சிங்கள அரசியலாளர்கள் திருந்தவில்லை, திருந்தமாட்டார்கள் என்பதைத்தான் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்காரின் 13இன் கீழான காவல்துறை அதிகாரம் குறித்தான விளக்கம் எடுத்துக்காட்டியுள்ளது. இந்த நிலையில் கருஜெயசூரிய போன்றவர்களின் எதிர்பார்ப்பு விழலுக்கு இறைத்த நீர்தான்.

வடக்கு மற்றும் தெற்கில் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவும், இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கும், அனைத்து பிரஜைகளுக்கும் கண்ணியத்துடன் வாழக்கூடிய உரிமையை வழங்குவதும், இந்த பிரச்சனைகளை எதிர்கால தலைமுறைகளுக்கு விட்டு வைக்காமல் இருப்பதும் எமக்குள்ள பெரும் கடமையாகும் என்றும் கரு ஜெயசூரிய குறிப்பிடுகிறார். ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவானவையே என்பது கண்கூடு.

இந்த பேச்சுகளைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கான கடமை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு போன்றே அனைத்து கட்சிகளுக்கும் உள்ளது. குறுகிய அரசியல் காரணங்களுக்காக இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் துரோகிகள்ன என்று எதிர்கால சந்ததியினர் எம்மைக் குற்றச்சாட்ட வழி வகுக்கும். ஆகையால் ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் உன்னத நோக்கத்துடன் இது விடயத்தில் தலையிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என்கிற கரு ஜெயசூரியவின் நோக்கம் நிறைவேறுவதற்கு நேர்மையான சிங்கள அரசியல்வாதிகள் இனிமேல் பிறந்து வந்தால்தான் உண்டு.



# உரையாடல் என்னும் சிந்தனைப் பரிமாற்றம்

**இரா • கதிரவன்**



“என் மகன் என்னுடன்தான் பேசுவான், அவனுக்கு எது வேண்டுமானாலும் என்னிடம்தான் கேட்பான், அவன் அப்பாவிடம் கேட்க மாட்டான், இன்னும் சொல்லப் போனால், அவன் அப்பாவிடம் சரிவரப் பேசக்கூட மாட்டான், அவனுக்கு, நான்தான் அவன் அப்பாவிடம் பேசிப் பெற்றுத் தரவேண்டும்” என்றெல்லாம் பெருமைப்படும் தாயார்களைப் பார்த்திருப்போம். அதேபோல், மகள் பற்றி அப்பா சொல்லக் கேட்டிருப்போம்.

இது ஒரு பெருமைப்படும் விஷயமா? தன் மகன் அவனது அப்பாவிடம் காட்டும் நெருக்கத்தைவிட தன்னுடன் நெருக்கமாக - நல்ல புரிதலுடன் இருக்கிறான், என்று அம்மா சொல்வது பெருமைப்படும் விடயம் அல்லவே. இதற்குக் காரணம் என்ன என்று யோசித்தால், அப்பாவிடம் மரியாதை, அப்பாவிடம் பயம், அப்பாவுக்கு பேச நேரமில்லை, அப்பா அதிகம் பேச மாட்டார்...இப்படி பல பதில்கள் வரலாம்.

குடும்பத்தில், மகனோ மகளோ, தனது பெற்றோர் இருவரிடமும் சரளமாக மனம்விட்டு, எந்த விடயத்தையும் குறித்துப் பேசும் வழக்கம் இருக்கவேண்டும். எவரேனும் ஒருவரிடம் பேசத் தயக்கம் ஏற்படுமானால், அதில் பெருமையோ மகிழ்ச்சியோ கொள்வதற்கு ஒன்றுமில்லை. மாறாக, அது ஒதுக்கித் தள்ள முடியாத பிரச்சினை அல்லது ஒரு பிரச்சினையின் தொடக்கம் எனலாம். அதற்கு அடிப்படை உரையாடும் திறம்.பிள்ளைகள், தன் பெற்றோர் இருவரிடமும் எந்த விடயத்தையும் தயக்கமின்றி, தெளிவாகப் பேச பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஊக்கப்படுத்தப்படவேண்டும். பேச்சுக்கலையில், உரையாடலில் விற்பன்னராக உருவாவதற்கு தொடக்கமும் ஒவ்வொரு வீட்டிலிருந்துதான் விதைக்கப்படுகிறது.

வீடுதான் முதல் பள்ளி, பெற்றோரே முதல் ஆசிரியர். அதன் நீட்சியாகத்தான் கல்விச்சாலை, பின்னர் உலகம், என்ற படிநிலை. வீட்டில் ஒரு சிறுமி, தனது கருத்துக்களை தனது பெற்றோரிடம், தெளிவாக - அழுத்தம் திருத்தமாக எடுத்து வைக்கிறார் என்றால், அவள் பிற இடங்களிலும், பள்ளியில், நண்பர்களிடம், ஆசிரியர்களிடம், வளர்ந்த பின்னர் அலுவலகத்தில் மேல் அதிகாரிகளிடம், அரசிடம், மக்களிடம் எடுத்துக் கூறிக் காரியம் சாதிக்கும் திறமைக்கான வித்தினை வைத்திருக்கிறார் என்று பொருள்.

உரையாடல் என்பது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே மட்டும் அல்ல, ஆசிரியர் - மாணவர், அக்கம் பக்கத்து வீட்டுக்காரர், முதலாளி - தொழிலாளி, உயர்அதிகாரி- ஊழியர், தலைவர் - பொது மக்கள், உற்பத்தியாளர் - வாடிக்கையாளர் எனப் பலரிடையே சதா சர்வ காலமும் நிகழ்ந்து கொண்டே இருக்கும் ஒன்றாகும்.

மாணவர் கற்கும் திறன் வளர, அண்டை அயலாரிடம் நல்ல சுமுக உறவு நிலவ, தொழில் உற்பத்திப் பெருக, அலுவலகம் சிறப்பாக இயங்க, நாடு வளர்ச்சிப் பாதையில் பயணிக்க என எல்லாவற்றிற்கும் கலந்துரையாடல் என்பது முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

வணிகத்தில் நட்டம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிணக்கு, நண்பர்களிடையே மனக்கசப்பு, தொழிலில் முன்னேற்றமின்மை போன்ற பலவற்றிற்கும் சரியான புரிதலும் அதைத் தெளிவாக எடுத்துரைக்கும் தன்மையும், உரையாடும் திறன் இன்மையும் பல சமயங்களில் முக்கிய காரணமாக அமைகிறது.

ஒருவர், தனது மனதில் தோன்றும் எண்ணங்களை, பிறரிடம் அதே பொருள் - உணர்வு நிரம்ப கடத்துவது என்பது மிக முக்கியமான ஆற்றலாகும். உரையாடல் என்பது உண்மையில் ஒரு கலையாகும். முயற்சித்தால் கற்றுக் கைவரப் பெறலாம்.

பிள்ளைகளைப் பொறுத்த வரையில், ஒரு சிலரிடம் மட்டுமே தயக்கமின்றி பேசுதல் என்பது ஒரு சொகுசு வளையத்தில் சிக்கி இருப்பது போன்றது. எவரிடமும் தயக்கமின்றி பேசுவது சற்றுச் சிரமமாக இருக்கலாம் ஆனால், அந்த சொகுசு வளையத்தில் இருந்து வெளி வர வைப்பது பெற்றோர் கடமை. வீட்டுக்கு வரும் உறவினர் - விருந்தினர்களுக்கு பிள்ளைகளை அறிமுகம் செய்துவைத்தல், அவர்களுடன் உரையாட வைத்தல், வயதில் மூத்தவர்களுடன் பேச வைத்தல் போன்றவற்றில் பெற்றோர் அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

பிறர் வீட்டுக்கு செல்லும்போது, அங்குள்ள சிறுவர் சிறுமியர், இளைஞர்கள் ஆகியோருக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுதல், அவர்களைப் பேசத் தூண்டுதல் அவசியம்.

பிள்ளைகளை ஊக்கப்படுத்த முற்படும் பெற்றோர், தாங்களும் நல்ல உரையாடலாளரராகத் தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும். தனது கருத்து மட்டுமின்றி, பிறர் கூறும் கருத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொள்ளும் பக்குவம் ஏற்படுத்தவும், அதற்கான பயிற்சியும் தர வேண்டும்.

உரையாடுவதன் இன்னொரு மிக முக்கியமான அம்சம், கவனிப்பது. நன்கு உரையாடுபவர் நன்கு ஊன்றி கவனிப்பவராக இருப்பார். பிறர் பேசுவதை கேட்பது மட்டுமின்றி, ஆழ்ந்து கவனித்து, கேள்விகள் கேட்டு பிறரை பேச ஊக்குவிப்பவராக இருப்பார். இவை, பல சமயங்களில், பிரச்சினைகளின் வேர்களைக் கண்டுபிடிக்கும் சில சமயங்களில் தீர்வுகளுக்கான விதைகளை வெளிக்கொணரும் .

உரையாடல் என்னும் சிந்தனைப் பரிமாற்றத்தில் வெற்றிகரமாக ஈடுபடுபவர்கள் நல்ல ஆசிரியர், அதிகாரி, நல்ல தொழிலதிபர், வழிகாட்டி, நாட்டின் தலைவர் என ஏற்றம் பெறுகிறார்கள்.

குடிமக்களிடம் சிறந்த கருத்துகளை தெளிவாக எடுத்துச் சொல்லி, அவர்களை ஊக்கப்படுத்தும் திறம் கொண்டவர்களாகவும், தியாகங்கள் செய்யத் தூண்டுபவர்களாகவும், நல்வழியில் நடத்துபவர்களாகவும், நாட்டினை உயர்த்துபவர்களாகவும் நல்ல தலைவர்கள் விளங்குகிறார’கள். அதன் அடிப்படையே நல்ல உரையாடல்தான்.

எனவே, உரையாடல் எனும் கலை கற்போம்... கற்பிப்போம்.

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து 7 பேர் பல்கலைக் கழக நுழைவிற்குத் தகுதி

(ஐ.ஏ.காதிர் கான்)

வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, வவுனியா - இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு மாணவரும் ஒரு மாணவியும் 3 பாடங்களிலும் அதி சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்ற அஜந்தன் தனுசன் என்ற மாணவரும், கலைப் பிரிவில் கல்வி பயின்ற சபீனா சிவகுமார் என்ற மாணவியுமே இவ்வாறு '3ஏ' அதி சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து இம்முறை வர்த்தகப் பிரிவிலிருந்து 5 பேரும், கலைப் பிரிவிலிருந்து 14 பேருமாக மொத்தம் 19 பேர் இப்பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், இதில் 7 பேர் பல்கலைக் கழக நுழைவிற்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில், வர்த்தகப் பிரிவில் பிரதீபன் மதுராங்கன் (ஏசீபீ), ஜெய்கீசன் சஞ்சுதன் (ஏபீசீ), டிலானி கேதீஸ்வரன் (பீ2சீ) மற்றும் கலைப் பிரிவில் ஜதுஷா மோகன்ராஜ் (பீ2ஏ), சங்கவி சிவகணேஷ் (சீ2பீ) ஆகிய மாணவ மாணவிகளும் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள குறித்த ஏழு மாணவ மாணவிகளும், இப்பாடசாலைக்கும், அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாமிற்கும், தமது பெற்றோர்களுக்கும் பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்துள்ளனர் எனவும், இவர்களது இச்சிறப்பு வெற்றிக்கு பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டு முயற்சியே பிரதான காரணியாகும் எனவும், அதிபர் மாணிக்கம் அரிபூரணநாதன் புகழாரம் சூட்டியுள்ளார். (05)

# தமிழ்தின போட்டிகளில் கோட்டமட்ட வெற்றிகள்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் இம்முறை நடைபெற்ற கோட்ட மட்டத்திலான தமிழ்மொழித் தினப் போட்டிகளில் பங்குபற்றி பெரு வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

ஒன்று தொடக்கம் ஒன்பது வரை வகுப்புகள் உள்ள இப்பாடசாலையில் 1ஆம், 2ஆம், 3ஆம் பிரிவு நிலைப் போட்டிகளில் பங்குபற்றி 7 முதலாம் இடங்களையும், 3 இரண்டாம் இடங்களையும், 4 மூன்றாம் இடங்களையும் பெற்று பெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியைகளுக்கும், பாடசாலையின் அதிபர் எம்.ஐ.சம்சுதீன் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

இப்பாடசாலை இணைப்பாட செயற்பாடுகளில் வருடா வருடம் பல சாதனை வெற்றிகளை பதிவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# தம்பதெனிய அல் ஹிஜ்ராவிலிருந்து முதன்முறையாக ஐந்து பேர் தேர்வு

(ஐ. ஏ. காதிர் கான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தம்பதெனிய நகரில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிரிஉல்ல தம்பதெனிய அல் ஹிஜ்ரா மகா வித்தியாலயம், அதன் 75 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், இவ்வருடம் இவ்வித்தியாலயத்திலிருந்து முதன் முறையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளில் ஐந்து பேர் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதன் பிரகாரம், மாணவிகளான எஸ்.எப். ருஷ்தா (3ஏ), எம்.எப். லீனா ஜெஸ்மின் (ஏ 2பீ), எஸ்.ஏ.பீ.பீ.பீ. சுமணசேகர (3பீ) ஆகியோர் பல்கலைக்கழகங்களுக்கும், ரீ.எப்.எப். ரமீஸா (ஏ 2சீ), எம்.எஸ்.எப். நிப்லா (2சீ எஸ்) ஆகிய மாணவிகள் கல்வியியற் கல்லூரிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வித்தியாலய ஆசிரியர்கள், வித்தியாலய சமூகத்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டு முயற்சியே வரலாற்றில் முதலில் பெற்ற இவ்வெற்றியாகும் என, அதிபர் சிபானா சனூன் பாராட்டிப் பேசினார். (05)

# கல்முனை அல்-பஹ்ரியாவுக்கு புதிய பிரதி அதிபர் நியமனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்று வந்த உதவி அதிபர் எம்.எச்.ஐ. இஸ்ஸத் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலைக்குப் புதிதாக வருகை தந்த உதவி அதிபர்களுக்கு பாடசாலைச் சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. (05)





குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சாம்பியனானது காரைதீவு கூடைப்பந்தாட் கழகம்









(வி.ரி. சகாதேவராஜா)

களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் நடத்திய கிழக்கு மாகாண கூடைப்பந்தாட் சுற்றுப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட் கழகம் வெற்றிவாகை சூடி சாம்பியனானது.

இச் சுற்றுத் தொடரில், கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 6 கூடைப்பந்தாட் கழகங்கள் பங்குபற்றின.

சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை களுதாவளை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டி காரைதீவு கூடைப்பந்தாட் விளையாட்டு கழகத்திற்கும், சிவானந்தா கூடைப்பந்தாட் விளையாட்டு கழகத்திற்கும் இடையே இடம்பெற்றது.

இதில், காரைதீவு கூடைப்பந்தாட் விளையாட்டு கழகம் 81:69 புள்ளியின் அடிப்படையில் வெற்றியை தமதாக்கி கெனடி கூடைப்பந்தாட் சுற்று தொடரின் சாம்பியனானது.

காரைதீவு கூடைப் பந்தாட் விளையாட்டு கழகம் சுற்றுதொடரின் முதலாவது போட்டியில் சிவானந்தா கூடைப்பந்தாட் விளையாட்டு கழகத்தை வென்று, இரண்டாவது போட்டியில் தன்னாமுனை கூடைப்பந்தாட் கழகத்தை வென்று ,அரை இறுதிப்போட்டியில் களுதாவளை மகா வித்தியாலய கூடைப்பந்தாட் அணியை வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானதும் குறிப்பிடதக்கது.

கெனடி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் த. சர்ஜின் தலைமையில் நடைபெற்ற இவ் இறுதிச்சுற்று நிகழ்வுக்கு அதிதிகளாக ச. நந்தகுமார் ( அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட் சங்கத்தின் தலைவர் ) களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.பாஸ்கரன், சிவசக்தி ஸ்ரீமுருகன் ஆலய பரிபால சபையினர், செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலய தலைவர் கலந்து சிறப்பித்தனர்.

இச்சுற்றுதொடரானது 7, 8,9, ஆகிய திகதிகளில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)



## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதானி கிறீன் எனர்ஜி பிரைவேட் லிமிட்டெட் (Adani Green Energy Private Limited) அல்லது அதானி கிறீன் எனர்ஜி சிறீலங்கா லிமிட்டெட் (Adani Green Energy SL Limited) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் உத்தேச 250 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், இலங்கையின் நிலைபேண்தகு வலுசக்தி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, முதலீட்டுச் சபை, இலங்கை மின்சார சபை, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் உள்ளிட்ட 67 பேர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பிலான மதிப்பீட்டின் நம்பகத்தன்மை, இலங்கை நிலைபேண்தகு வலுசக்தி அதிகார சபையின் வகிபாகம் ஆகியன குறித்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உத்தேச காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் இரண்டு அரசுகளுக்கு இடையிலான உடன்படிக்கை எனும் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பாகவும் அதில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த மின் உற்பத்தித் திட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரு கிலோவாட் மணித்தியால மின்சாரத்தை 8.26 அமெரிக்க டொலர் எனும் அடிப்படையில் 20 வருடங்களுக்கு கொள்வனவு செய்யும் தீர்மானம் தொடர்பாகவும் மனுதாரர்கள் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் அந்த செலவு 4.6 அமெரிக்க டொலர்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நலன்களை பேணவும், சுற்றுச்சூழல், தாவரங்கள், விலங்கினங்கள், பொது நிதி உள்ளிட்ட பொதுச்சொத்துகளைப் பாதுகாத்தல், இலங்கையின் பொதுமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் உரிமைகள், சுயாதீனத்தன்மையை பாதுகாப்பதற்காக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் விடயம் பேசப்படுகிறது. எனவே, இம்முறை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவார். அதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் , நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் சிவில் சமூகத்திற்கு மக்கள் ஆணையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அது தவறானது. மக்கள் தங்கள் பிரதிநிதியாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளனர். ஆனாலும் மக்கள் தமக்கானதைத் தாமே தெரிவு செய்வார்கள். அவ்வாறு மக்களால் உருவானதே சிவில் சமூகம். அவர்களுக்கும் தமக்கு என்ன தேவை என்பதனை தீர்மானிக்க , சொல்லமுடியும்-எனசிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாட்டை முன்னெடுப்பார்கள் என்று நான் கருதவில்லை. தேர்தல் ஒத்திவைக்கப்படும் முடிவு எடுக்கப்பட்டால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதியாக அமைந்து விடும்" என்றார் மகிந்த.




காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் ஏற்பட்ட அரகலய போராட்டமே அபிவிருத்தி குறித்து சிந்திக்க தூண்டியது

## நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தெரிவிப்பு





(கே எ ஹமீட்)

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி போன்ற நகரங்களின் மீது வீசப்பட்ட அணுகுண்டு தாக்கங்களின் பின்னர் ஜப்பான் எவ்வாறு அபிவிருத்தியில் முன்னிலைக்கு வந்ததோ அவ்வாறே இலங்கையில் ஏற்பட்ட அரகலய போராட்டத்தின் பின்னர் அமைச்சுக்களும் நிறுவனங்களும் அபிவிருத்திகள் தொடர்பில் கரிசணை கொண்டுள்ளன என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை மற்றும் காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையில் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ஆரம்பகட்டமாக இரண்டு மில்லியன் ஷரூபாக்களை ஒதுக்கீடு செய்து குறித்த கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்காக திங்கட்கிழமை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவிட்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், தான் பதவியேற்ற காலத்தில் கொரோனா என்றும் பொருளாதார நெருக்கடி என்றும் பல்வேறு தடைகள் வந்து அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்த முடியாது போனதாகவும் தற்போது அவ்வாறான நிலை மாறி அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவைகளை முன்னெடுக்க முடியுமானவரை முயச்சிப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் அவர்களும் விஷேட அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்எம்.எச். எம். .ஜாபீர் அவர்களும் கலந்து கொண்டதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ. சம்சுதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான ஏ.எம். அஷாம் மௌலவி உள்ளிட்ட வர்களுடன் பாடசாலை அபிவிருத்திநிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ், பிரதி அதிபர்களான திருமதி குறைசியா றாபிக், றின்ஷா பர்வின், உதவி அதிபர் எம்.ஏ.சி. எல். நஜீம், பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

இங்கு பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுசின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர் ஜெகராஜன் கடமையை பொறுப்பேற்றார்



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான சிவஞானம் ஜெகராஜன் இன்று (10) திங்கட்கிழமை கடமையை பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அவருக்கான வரவேற்பு நிகழ்வு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக பொது நிர்வாக அமைச்சு இந்த நியமனத்தை வழங்கி இருக்கின்றது .

ஏலவே மேலதிக அரசாங்க அதிபராக இருந்த வேதநாயகம் ஜெகதீசன் பதவி உயர்வு பெற்று போக்குவரத்து அமைச்சுக்கு செல்கின்ற காரணத்தால் இந் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது .

2007 இல் இலங்கை நிருவாகசேவையில் இணைந்து கொண்ட ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வந்த வேளையிலே கல்முனை வடக்கு பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி இருந்தார்.

2013 இல் திருக்கோவில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு அங்கு சிறப்பான பணியாற்றி வந்த வேளையில் 2019 மீண்டும் காரைதீவுக்கு நியமிக்கப்பட்டார்.

ஐந்து வருட கால சேவையை பூர்த்தி செய்து தற்பொழுது அவர் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவரது தெரிவுக்காக சரமாரியாக வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

இவரது இடத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி இராகுலநாயகி பதில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார .(05)

# சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்புக்கு மக்கள் எதிர்ப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு சனிக்கிழமை இயந்திரத்துடன் வந்தவர்களுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால் உடைப்பு இயந்திரம் அப்பகுதியில் இருந்து இன்னும் அகற்றப்படவில்லை. இவ்விடயம் சம்பந்தமாக சேனையூர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியில் மக்கள் கூடி நின்றனர் மக்கள் கருத்து தெரிவிக்கையில் -

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக எமது வாழ்வாதரத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும். வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் மலைகளை உடைப்பதற்கு அனுமதி வழக்கியது யார் என்ற கேள்வியை எழுப்பினர்.

சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கருத்து தெரிவிக்கையில் -

நாளாந்தம் கூலித் தொழிலையும், நெற்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளை நம்பி வாழ்ந்து வரும் மக்கள்தான் இப் பகுதியில் இருக்கின்றனர்.

குளம், வயல், காடு போன்ற வளங்களையே நம்பி வாழ்கின்றனர் மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை இயற்கைக் காட்டு வளம் என்பன கல்லுடைப்பால் அழிவுறும் அபாயம் ஏற்படும் என்றார்.

இந்த மலையில் இந்து வழிபாட்டு அடையாளங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)





# விநாயகபுரம் பத்திரகாளி குடமுழுக்கு பெருவிழா

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள விநாயகபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்மனுக்கு விசேட கும்பாபிஷேக பெருவிழாவா ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளை நடத்தி வைத்தார்கள்.

கடந்த வெள்ளிகிழமை மாலை கிரியைகளுடன் ஆரம்பமாகி சனிக்கிழமை பக்தர்களால் எண்ணெய் காப்பு சார்த்தும் நிகழ்வு இடம்பெற்று ஞாயிற்றுக்கிழமை பஞ்ச பூதங்களின் ஆசிர்வாதத்துடனும் மங்கள வாத்தியங்கள் முழங்க மக்களின் விண்ணை பிளக்கும் அளவுக்குமான அரோகரா கோஷங்களுடனும் மிக சிறப்பாக இடம்பெற்றது .

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆலையடி வேம்பில் பல்கலைக்கழக மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு







(எம். எப். றிபாஸ்)

கிழக்கு மாகாண தமிழ் மக்களின் தலைவிதியை மாற்ற வேண்டும் என புறப்பட்ட ஒரே அரசியல் இயக்கம் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி எனும் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியை பலப்படுத்தி ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம் என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச செயற்குழு உறுப்பினர் த.நவனீதன் தலைமையில் ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றினால் மாத்திரமே கல்விப்புலத்தில் உள்ள தேவைகள் நமக்குத் தேவையான ஆளனி பற்றாக்குறை நிவர்த்தி பதவி உயர்வுகளை பெறலாம்.

கடந்த கோட்டாபய அரசாங்கம் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 600 சிற்றூழியர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது. அம்பாறையில் மொட்டில் வந்தவர்கள் 3 இடையில் வந்த முசாரப் ஒருவர் என 2400 பேரை நியமித்துக்கொண்டனர். தமிழர்களுக்கு யாரும் இல்லை. ஒன்றும் இல்லை.

ஆகவேதான் கிழக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆணையை பெறும் நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஏனைய கட்சிகள் இதற்கான திட்டமிடலை மேற்கொள்ளவில்லை. இதற்காகவே இன்று ஆலையடிவேம்பிற்கு வருகை தந்துள்ளேன். இதுபோன்ற பாராட்டு நிகழ்வுகளை நடத்தி மக்கள் மனங்களிலும் மாணவர்கள் மனங்களிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பது எனது விருப்பம்.

மட்டக்களப்பில் மாத்திரம் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதாக விமர்சனங்கள் உள்ளன. அதற்குக் காரணம் உண்டு. அந்த மக்கள் எனக்கு ஆணையினை வழங்கியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்தடுத்து நான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதை யாரும் தடுக்க முடியாது. மக்கள் ஆணை தொடர்ந்தும் எனக்கு கிடைக்கும் என நம்புகின்றேன்.

ஆனாலும் எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்திலும் கல்வி உள்ளிட்ட அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படும். - என்றார்.

இங்கு உரையாற்றிய தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன், அம்பாறை மாவட்ட மக்கள் தலைவர் சந்திரகாந்தனின் வருகையை அழைத்து காத்திருக்கின்றனர். ஆகவே தொப்புள் கொடி உறவுகளை பாதுகாக்கும் பொறுப்பு எமக்கிருக்கிறது. கட்டிக்காக்கும் பொறுப்பு இங்குள்ள சமூக மட்ட அமைப்புக்களின் தலைவர்களுக்கு இருக்கின்றது. - என்றார்.

நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பூ.பிரசாந்தன், திருக்கோவில் வலயக்கல்வி பணிப்பாளர் ஆர்.உதயகுமார் , கோட்டக்கல்விப்பணிப்பாளர் க.கமலமோகனதாசன், கட்சியின் தொகுதி அமைப்பாளர் கே.பிரபாகரன், கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச உறுப்பினர் சிவகுமார் மற்றும் முக்கியஸ்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளுக்கு பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது.

இதன் பின்னராக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் பல்வேறு கல்வி அபிவிருத்தி தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தார். தொடர்ந்து க.பொ.த.உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் 77 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (05)

# தம்பதெனிய அல் ஹிஜ்ராவிலிருந்து முதன்முறையாக ஐந்து பேர் தேர்வு

*(ஐ.ஏ.காதிர் கான் )*

*வரலாற்றுச் சிறப்புமிக்க தம்பதெனிய நகரில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிரிஉல்ல தம்பதெனிய அல் ஹிஜ்ரா மகா வித்தியாலயம், அதன் 75 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், இவ்வருடம் இவ்வித்தியாலயத்திலிருந்து முதன் முறையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளில் ஐந்து பேர் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.*

*இதன்பிரகாரம், மாணவிகளான எஸ்.எப். ருஷ்தா (3ஏ), எம்.எப். லீனா ஜெஸ்மின் (ஏ 2பீ), எஸ்.ஏ.பீ.பீ.பீ. சுமணசேகர (3பீ) ஆகியோர் பல்கலைக்கழகங்களுக்கும், ரீ.எப்.எப். ரமீஸா (ஏ 2சீ), எம்.எஸ்.எப். நிப்லா (2சீ எஸ் ) ஆகிய மாணவிகள் கல்விக் கல்லூரிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.*

*வித்தியாலய ஆசிரியர்கள், வித்தியாலய சமூகத்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டு முயற்சியே வரலாற்றில் முதலில் பெற்ற இவ்வெற்றியாகும் என, அதிபர் சிபானா சனூன் பாராட்டிப் பேசினார். (05)*

# உலக சாதனைத் தொகுப்பு நூலில் இலங்கையரது கவிதைக்கும் இடம்

(ஐ. ஏ. காதிர் கான் )

'தமிழ்த் தொண்டன்' பைந்தமிழ்ச் சங்கம் மற்றும் 'நிலாவட்டம்' இலக்கிய அமைப்பு ஆகியன இணைந்து, தொகுப்பாசிரியர் கவிஞர் என். ஜாகிர் உஷேன் தலைமையில், வட சென்னையில் நடத்திய பத்தாயிரம் கவிதைகள் உலக சாதனைத் தொகுப்பு நூலான 'கவித் தேனருவி' எனும் கவிதைத் தொகுப்பு நூலில், இலங்கையில் வாழும் மாவனல்லை அரநாயக்க தல்கஸ்பிட்டியவைச் சேர்ந்த எழுத்தாளரும் கவிதாயினியுமான ஆசிரியை திருமதி நதீரா வசூக் எழுதிய 'விடியலைத் தேடும் விழிகள்' எனும் சிறப்புக் கவிதையும் பிரசுரமாகி, இலங்கை வரலாற்றில் சாதனை பதித்துள்ளது.

இந்தியாவில் நூறு கவிதைகளுடன் வெளியான இச் சிறப்பு நிகழ்வில், இவர் தனக்கென ஓரிடத்தைப் பெற்று 'நோபல் உலக சாதனை' படைத்து, அதற்கான விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்று, இந்தியாவில் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டிருப்பதும் சிறப்பம்சமாகும்.

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை கல்வி வலயத்தில் அரநாயக்க கோட்டத்தில் தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியையான எழுத்தாளரும் கவிதாயினியுமான திருமதி நதீரா வசூக் அவர்களுக்கு, அவரது இலக்கியப் பயணத்தில் ஆரம்ப காலம் தொட்டு ஆர்வம் இருந்தாலும், 2017 ஆம் ஆண்டு முதலே இலக்கியத் துறையிலான அவரது பயணத்தை 'முகநூல்' வாயிலாகவே ஆரம்பித்து, அன்று முதல் தொடர்ச்சியாக எழுதி வருகின்றார்.

சுமார் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட 'முகநூல்' குழுமங்களில் 'காதல் கவிதை, மரபுக் கவிதை, புதுக்கவிதை, அந்தாதி படக்க விதை, சமூகக் கவிதை, தன்முனைக் கவிதை, இருவரிக் கவிதை, ஹைக்கூ, சிறுகதை' என தொடர்ச்சியாக எழுதி வருவதோடு, இவரது 'கவிதைகள் சிறுகதைகள்' என்பன பத்திரிகைகள் மற்றும் மின்னிதழ்களிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதுவரையில், கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் பலவற்றையும் பெற்றிருக்கின்றார்.

இதேவேளை, நதீரா வசூக் பல குழுமங்களில் நடுவராகவும் பயணித்து வருவதுடன், தற்போது 'கிராமத்துத் தென்றல்' கவிதைத்தளம் 'வட்ஸ்அப்' குழுமத்தின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

முதல் விருதாக இவர், 'வானம் வசப்படும்... வா நண்பனே வா' எனும் குழுமத்தில் இருந்து 2019 இல் கிடைத்த 'கவித்தாரகை விருது' (தமிழ்நாடு), 'கவிமலர்கள்' குழுமத்தில் இருந்து கிடைத்த 'முதலாவது உலகசாதனை விருது' (தமிழ்நாடு), 2020 இல் 'தனலட்சுமி ரோசாக்கூட்டம்' வழங்கிய 'விருது' (தமிழ்நாடு), 2021 இல் 'தேனீக்கலை இலக்கிய மன்றம்' வழங்கிய 'கவித்தேன்' விருது (இலங்கை), 'இதயத்தளம் கலை இலக்கிய வட்டம்' வழங்கிய 'இதயப்பாவளர் விருது' (இலங்கை), 2023 இல் 'இரண்டாவது நோபல் உலக சாதனை விருது' (தமிழ்நாடு), 2023 இல் 'அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் இலக்கியக் கழகம்' ஏற்பாட்டில் வழங்கிய 'அருள்வாக்கி 'வித்துவ தீப' விருது' (இலங்கை) போன்ற அதி சிறப்பு விருதுகளையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேலும், இவரது கன்னி வெளியீடாக 2023.03.17 இல் 'விடிந்தும் திறந்து கிடக்கின்றது புத்தகம்' எனும் நூல் வெளியிடப்பட்டதுடன், வரும் காலங்களில் இன்னும் பல நூல்களையும் இவர் வெளியிடவுள்ளார்.

அவற்றில், இந்தியாவில் உலக சாதனை படைத்த இவரது 'விடியலைத் தேடும் விழிகள்' என்ற கவிதைத் தொகுப்பு நூல், மிக விரைவில் இலங்கையில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# சாய்ந்தமருதில் 'பெண் ஆயுள்' என்னும் தலைப்பில் பெண்களுக்கான செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம மட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்களுக்கான 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கமும், தாய்,சேய் பராமரிப்பு மற்றும் குடும்ப நலத் திட்டம் தொடர்பான செயலமர்வு சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அனுசரணையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமுதாய அடிப்படை அமைப்பு விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீனின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வின் வளவாளராகவும் விசேட அதிதியாகவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஷத் காரியப்பர் கலந்து கொண்டார். நிகழ்வில் 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கமும் தாய்,சேய் பராமரிப்பு, தொற்றா நோய், மற்றும் குடும்ப நலத்திட்டம் பற்றிய பூரண விளக்கத்தினை டாக்டர் அர்ஷத் காரியப்பர் வழங்கினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், செயலாளர் எம்.ஜானூன், பொருளாளர் ஏ.ஆர்.ஷர்மிலா உள்ளிட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட ஸாஹிரா மாணவிகளை சந்தித்தார் ரிஷாத் பதியுதீன் எம்.பி.



திருகோணமலை ஸாஹிரா கல்லூரி மாணவிகள் திட்டமிட்டு பழிவாங்கப்பட்டுள்ளமையை அவர்களுடன் நேரடியாக உரையாடிய பின்னர் தனக்கு அறியக்கூடியதாக இருந்ததாகவும், நீண்டகால சதியின் இறுதி வடிவமாக இது அமைந்துள்ளது என்பதைக் காணமுடிகிறது என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட பாதிக்கப்பட்டிருக்கும் இந்த மாணவிகளை தாம் நேரில் சந்தித்து, நடந்த உண்மையான விடயத்தைக் கேட்டறிந்துகொண்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஸாஹிரா கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத், கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ஷூப் மற்றும் அரசியல் அதிகார சபை உறுப்பினர் டாக்டர் ஹில்மி மொஹிடீன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ரிஷாத் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு -

'திருமலை ஸாஹிரா கல்லூரியில் கற்ற 70 மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. உயிரியல் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவுகளில் தோற்றிய இந்த மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டு, இதுவரை வெளிவராதுள்ளன.

இதனால், இந்த மாணவிகள் வேதனையுடனும் மன உளைச்சலுடனும் இருக்கின்றனர். திட்டமிட்டு இந்தச் சதி இடம்பெற்றுள்ளது. சுமார் பத்து வருடங்களாக, தொடர்ச்சியாக வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்கி வரும் திருமலை ஸாஹிரா கல்லூரியின் மீது, குறிவைத்து இனவாதம் பாய்ந்துள்ளது.

இந்தப் பாடசாலையில் உள்ள திறமையான மாணவர்களை இருட்டடிப்புச் செய்யும் நோக்கில், தவறிழைக்காத இவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை திணைக்கள சுற்றுநிருபத்துக்கு அமைய, பர்தா அணிந்து சென்ற மாணவிகளின் காதையும் முகத்தையும் காட்டுமாறு கூறப்பட்டபோது, அவர்கள் அதனை செய்துள்ளனர். 70 மாணவர்களில் 68 மாணவர்கள் பர்தாவை கழட்டிவிட்டு, கையில் வைத்திருந்த துப்பட்டாவினால் தலையை மறைத்துள்ளனர். ஏனைய இரு மாணவிகளும் தமது பர்தாவை கழட்டிவிட்டு, அதையே மீண்டும் தலையில் போட்டுள்ளனர். எல்லோரும் காதையும் முகத்தையும் காட்டியவர்களாகவே பரீட்சை எழுதியுள்ளனர். இவ்வாறான நிலையிலும் மேலதிகாரிகளில் ஒருவர் மாணவிகளை பார்த்து, உங்களது பரீட்சை பெறுபேறுகள் வருவது நிச்சயம் இல்லை என்று கூறியிருக்கிறார். அதுமாத்திரமின்றி, பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவிகளின் மனதை புண்படுத்தும் வகையில் பேசியிருக்கின்றார்.

அத்துடன், பரீட்சை முடிவடைந்து சில நாள்களின் பின்னர், குறித்த மாணவிகள் கொழும்பில் உள்ள பரீட்சை திணைக்களத்துக்கு விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்தனர். எனினும், சிலரின் வேண்டுகோளுக்கு அமைய முடிவுகள் மாற்றப்பட்டு, ஒரு சில பரீட்சை திணைக்கள அதிகாரிகள் திருகோணமலைக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர், மாணவிகள் தவறிழைத்ததாக எழுத்து மூலம் எழுதித்தருமாறு மாணவிகளை அதிகாரிகள் பணித்துள்ளனர். எனினும், மாணவிகள் தாம் தவறிழைக்கவில்லை என்றும் இவ்வாறான குற்றச்சாட்டுகள் தவறானது என்றும் எழுதிக் கையொப்பமிட்டுள்ளனர். மேலும், 'பரீட்சை ஆணையாளர் என்ன முடிவெடுத்தாலும் அதற்குக் கட்டுப்படுவோம்' என்று எழுதித் தருமாறும் மாணவிகள் பணிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு எழுத முடியாது என மாணவிகள் மறுத்தபோது, 'அவ்வாறு எழுதித்தராவிட்டால் உங்களது பரீட்சை பெறுபேறுகள் வெளிவராது' என அதிகாரிகள் அவர்களை அச்சுறுத்தி, வற்புறுத்தியதன் பின்னரே, மாணவியர் விசாரணை அதிகாரிகள் கூறியவாறு எழுதிக்கொடுத்துள்ளனர். இதுவே, திருமலை ஸாஹிரா கல்லூரி மாணவிகளின் உண்மை நிலையாகும்.

ஆனால், வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 10 முஸ்லிம் மாணவிகளும் அதே மண்டபத்தில் பரிட்சை எழுதியுள்ளனர். அவர்களின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இவற்றை பார்க்கும்போது, திருமலை ஸாஹிரா கல்லூரி திட்டமிட்டு பழிவாங்கப்பட்டுள்ளது என்பது ஊர்ஜிதமாகின்றது.

நான் இன்றும் பரீட்சை பிரதி ஆணையாளருடன் பேசினேன். அடுத்த வாரத்துக்குள் குறித்த மாணவிகளின் பெறுபேறுகள் வெளியாகும் என்று அவர் கூறியிருக்கின்றார். அவ்வாறு பெறுபேறுகள் வராவிட்டால் நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் குரல் கொடுப்போம். நீதிமன்றத்தையும் நாடுவோம். எங்களாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். - என்று கூறினார்.

(05)

# புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி திருமலையில் தொடக்கம்

(ஹஸ்பர்.ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்று கூடல் மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2023.12.02 இடம் பெற்ற கிராம உத்தியோகத்தர் 3 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பாக இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் எழுத்து மூலம் மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஆட்சேர்ப்பு செய்யும் புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப காலாண்டு பயிற்சிநெறியாக இப்பயிற்சி நெறி நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

51 புதிய கிராம உத்தியோகத்தர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஃறூப், கணக்காளர் ஏ.எல். பிரசாத் விஜேசிங்க, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ். குருகுலசூரிய, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் மற்றும் புதிய கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# உயர்தரப் பரீட்சையில் கல்லொழுவை அல் அமானில் 11 மாணவிகள் சித்தி

(ஐ.ஏ.காதிர் கான்)

வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, மினுவாங்கொடை கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 11 மாணவிகள் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதில், அதி சிறப்புச் சித்திகளைப்பெற்றுள்ள மாணவிகளான எம்.ஜே.எப். அஸ்மா (3ஏ), ஜே.எஸ்.எப். ஷரபா (3ஏ) மற்றும் மாணவிகளான எம்.எம்.எப். இல்மா (2ஏ பீ), எம்.எப். ஆதிகா (ஏபீசீ), எம்.ஆர்.எப். நபீலா (2ஏ சீ), எம்.ஆர்.எப். நபீஹா (ஏ 2பீ), எம்.என்.எப். ஆயிஷா (2ஏ சீ), எம்.என்.எப். திக்ரா (ஏ 2பீ) ஆகியோர் கலைப் பிரிவிலும், மாணவிகளான எம்.ஆர்.எப். ருகையா (ஏ 2பீ), எம்.ஆர்.எப். அப்ரா (ஏ 2சீ), எம்.என்.எப். பௌஸா (ஏ 2சீ) ஆகியோர் வர்த்தகப் பிரிவிலும் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று, பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று, வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம். ஆஸிம் தெரிவித்துள்ளார். (05)

மாலிங்க தேடிய

# இளம் கிரிக்கெட் வீரர் பைனாஸின் வீட்டுக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் விஜயம்





இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்கவின் முகநூல் காணொளியின் மூலம், நாடு முழுவதும் அறியப்பட்டு புகழ் பெற்ற அநுராதபுரம், ஹொரவ பொத்தானை, பத்தாவ பிரதேசத்தின் இளம் கிரிக்கெட் வீரர் பைனாஸின் இல்லத்திற்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கடந்த சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டதுடன், பைனாஸின் திறமையை பாராட்டி, வாழ்த்தி, ஒரு தொகை பணத்தையும் வழங்கிவைத்தார்.

அத்துடன், பைனாஸின் எதிர்கால கல்விச் செயற்பாடுகள் மற்றும் கிரிக்கெட்டில் அவருக்குள்ள ஈடுபாடு, அதீத திறமை குறித்து கேட்டறிந்துகொண்ட தலைவர் ரிஷாத், அவரின் எதிர்கால முன்னேற்றத்துக்கு தன்னால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

இதன் போது, இளம் வீரர் பைனாஸின் பெற்றோர், உறவினர்கள், சக விளையாட்டு வீரர்கள் மற்றும் ஊர்மக்கள் என அனைவரும் அங்கு ஒன்றுகூடியிருந்ததுடன், தலைவர் ரிஷாத் பதியுதீனுக்கு தங்களது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

இந்த சந்திப்பில் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களான ஹைருதீன், நிஸ்தார் மற்றும் இல்ஹாம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(05)

# வவுனியாவில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இரண்டு மாத குழந்தை பரிதாபச் சாவு

*வவுனியா, ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளத்தில் வீட்டின் சுவர் வீழ்ந்து இரண்டு மாத குழந்தை பலியாகியுள்ளது.*

*முல்லைத்தீவில் வசிக்கும் ச.சிந்துஜன் தனது மனைவி மற்றும் இரண்டு மாத குழந்தையுடன் வவுனியாவில் உள்ள தனது தங்கையின் வீட்டிற்கு கடந்த 7ஆம் திகதி வந்துள்ளார்.*

*நிகழ்வொன்றுக்காக வருகை தந்திருந்த நிலையில் தங்கையின் தற்காலிக வீட்டில் தங்கியிருந்த போது ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 5 மணியளவில் வீட்டில் உப்புகுயில் உள்ள கற்சுவர் குழந்தையின் மீது வீழ்ந்துள்ளது.*

*உடனடியாக வீட்டார் குழந்தையை வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதிலும் குழந்தை உயிரிழந்துள்ளது. சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.*

*(05 - 100)*

காலைக்கதிர் Kalaikkathir

# பக்தியினூடாகச் சமுதாயச் சீர்திருத்த கருத்துக்களை துணிந்து காட்டியவர் சேக்கிழார் பெருமான்

## ஜூன் 10 சேக்கிழார் தினம்




" பக்திச் சுவை நனி சொட்ட சொட்ட " பாடியதால் சேக்கிழார் சிறப்புப் பெறுகிறாரா? புதிய உத்தியைக் கையாண்டதால் சேக்கிழார் உயர்ச்சி பெறுகின்றாரா? முதலமைச்சர் ஆகவிருந்தமையால் சிறப்புப் பெறுகின்றாரா?புரட்சிகரமான கருத்துக்களை முன் வைத்தமையால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா?அல்லது பெரியபுராணத்தைத் தந்தமை யால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா? என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா ?

பேரரசு உருவாகி அந்தப்பேரரசுக்கு புகழ்மாலைகள் பெருகும் பொழுது ஆட்சியாள ர்கள் தம்மை மறப்பது இயல்புதான். ஆனால் இந்தநிலையைத் தொடரவிட்டால் குறிக்கோ ள்கள் இல்லாமலே கெட்டழிந்தும் போய்விடலாம். போர் வெற்றியாலும், அதனால் ஏற்ப டும் பேராசையினாலும் அந்தப்பேரரசு தன்னை ஒருநாளும் தழர்வடையச் செய்யும்படி நடந்து கொள்ளவும் கூடாது.ஆனால் இதனை எந்தவொரு அரசும் நோக்கியதாகத்தெரி யவில்லை. தளர்வுறும் வேளை அந்த நாட்டுமக்களையும் அப்போது உள்ள அரசர்களை யும் நல்வழிப்படுத்துதல் மிகவும் முக்கியமானதாகும்.இதனை முதலமைச்சராக இருந்த அனுபவம் மிக்க சேக்கிழார் தம்வசம் எடுத்துக்கொண்டார். இதனால் பெரியபுராணம் பிறந்தது எனலாம்.

பிற்காலச் சோழமன்னரது போக்கை சேக்கிழார் விரும்பவில்லை.அவர்களின் மனோபாபம் வேறுவிதமாகப் போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு நல்ல வழியைக் காட்டினால்த்தான் மக்களும் நாடும் மீண்டும் பழைய நிலைய அடையமுடியும் என்று கருதினார். எனவே மன்னர் மனம்மாற, மக்கள் விழிப்புப்பெற ,அவர்கையாண்டவழிதான்--- ஆண்டவன் அடியாரை அறிமுகப் படுத்தும் அதி உன்னத பணியான பெரியபுராணமாக அமைந்தது." குடிஉயரக் கோனுயர்வான் " இதை நன்கு அறிந்தவராகச் சேக்கிழார் இருந்தபடியால் குடிகள் உயர்வுபெற வேண்டுமானால் கோன் -- அதாவது அரசர்களை உயிர்ப்பூண்டவேண்டும் என எண்ணினார். அதனால் மன் னர்மனத்தில் இறையுணர்வை ஊட்டுவதே மிகச்சிறந்தவழி என்று அதனை மையமாகக் கொண்டு சுவைபட ஒருகாவியத்தை ஆக்கினார்.

மந்திரிகள் என்றாலே ஊழலும் , பித்தலாட்டமும் , நேர்மையீனமும், ஏமாற்றுத லும்தான் எங்களுகெல்லாம் தற்போது ஞாபகத்துக்கு வரும் அந்த அளவுக்கு மந்திரி கள் நிலை இருக்கிறது.ஆனால் சேக்கிழாரே மன்னனையும் மக்களையும் நல்வழிப்படு த்துவதற்காக அந்தஸ்த்தும் அதிகாரமும் மிக்க முதலமைச்சர் பதவியினையே துறந்து விடுகின்றார்.அதிகாரத்தில் இருந்து ஆண்டவன் புகழ் பாட அவர்விரும்பவில்லை. இதனால்த்தான் அவர் வாயினினின்றும் " கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் --------

ஓடும் செம்பொனும் ஒக்க நோக்குவார் " என்று வரிகள் வந்தனபோலும்.

சேக்கிழாரின் புலமை சாதாரணமானதல்ல. கம்பரைப்போல கவிபாடும் ஆற்றல் மிக்கவர்.அவர்மட்டும் வேறுதுறையில் காவியம் பாடியிருந்திருந்தால் சில வேளை கம்பராமாயணத்தைக்கூட விஞ்சியியும் இருந்திருக்க வாய்ப்பும் உண்டு.ஆனால் அவர் நோக்கம் அதுவல்ல.அதனால்த்தான் அடியார்கள் வரலாற்றைத தேடிப் பிடித்து அதனை எப்படிக் கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுத்து நின்றார்.

சேக்கிழார் காவியம் பாடுவதற்கு எடுத்துக்கொண்ட பொருள் வித்தியாசமான தாகும்.சிலம்புமட்டுமே உயர்திணை அல்லா ஒன்றை பாடுபொருளாகக் கொண்டிருந்தது அதனை மனத்திற்கொண்ட காரணத்தால் சேக்கிழாரும் " தொண்டை " கருப்பொருளாக வைத்துத் தனது காவியத்தை படைத்து விடுகின்றார்.அறுபத்துமூன்று அடியவர் கதை களைவைத்துக்கொண்டு ஒருகாவியத்தைப் புனைவது என்பது இலகுவான காரியமல்ல. இதனை நன்கு மனத்திற் கொண்ட காரணத்தால் எப்படியும் இந்த அடியார்களை இணைப்பதற்கு ஒரு மார்க்கம் கிடைக்காதா என்று சிந்தித்த பொழுதுதான்........ அடியார்கள் எவ் வாறு இருப்பினும் அவர்கள் யாவரிடமும் தொண்டுமனப்பாங்கு இருப்பதை அவரால் புரிந்து கொள்ளமுடிந்தது எனலாம். எனவே இப்பொழுது அடியார்கள் தொகை அவருக்கு ப்பெரிதாகப்படவில்லை. அங்கே தொண்டுதான் தலைமை வகித்தது. எனவே தொண் டை மையமாக வைத்து தொண்டர் பெருமையை பறைசாற்றும் காவியத்தை எழிதாகப் புனைந்து எமக்கு அளித்து விட்டார். இது சேக்கிழாரின் பெருமைதானே!

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், நம்பியும், பெரியபுராணம் பாட சேக்கிழாருக்கு பெரிதும் உதவிய போதும் ..... சேக்கிழார் அவற்றோடு மட்டும் நின்றுவிடாமல் , அடியார்கள் பற் றிய விஷயங்களையெல்லாம் ஆதாரத்துடன் எடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தால் ஊர்கள் தோறும் சென்று பல தகவல்களையும் எடுத்துக்கொள்கின்றார். அமைச்சராக இருந்த காரணத்தால் அவர் ஊர்கள் தோறும் சென்று பல வரலாற்றுத்தகவல்களையும்

கல்வெட்டுப் போன்றவற்றையும் ஆராயும் நுண்மாண் நுழைபுலத்தைத் தன்னகத்தே கொண்டவராக விளங்கினார்.இதனால் அவரின் காவியமான பெரியபுராணம் தலை நிமிர்ந்து நிற்கின்றது.இது அவருக்கு உயர்வையும் சிறப்பையும் தராமல் இருக்கத்தான் முடியுமா?

பக்தியை ஊட்டுவதற்குப் பெரியபுராணத்தைச் சேக்கிகிழார் பயன்படுத்தினாலும் அதன் ஊடாக பல சமூக சீர்திருத்தங்களையும் துணிந்து செய்ய நினைக்கின்றார் . இது அவரின் சமூக அக்கறையினையே காட்டுகிறது எனலாம்.பலவிஷயங்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்ற காரணத்தால்த்தான் சோழமன்னனே அவருக்கு முதல் அமைச்சர் பதவி வழங்கி பெருமைப்படுத்துகின்றான். ஆட்சியில் அதிகாரத்தில் இருந்து வேலை பார்த்தவருக்கு நாட்டின் நிலை அங்கு வாழும் மக்களின் நிலை பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தது. தனக்குக் கிடைத்தை அனுபவங்களின் வெளிப்பாடாக பெரியபுராணத்தில்..... அவரின் சமூக அக்கறையாக வந்துநிற்கிறது எனலாம்.

பெரியபுராணத்தில் இடம்பெறுகின்ற அடியவர்கள் யாவரும் வெவ்வேறு சமூக நிலையில் இருந்து வந்தவர்கள்.அந்தணர், அரசர், புலையர் , வேட்டுவர், மீன்பிடிகாரர் வண்ணார், குயவர், மரமேறுபவர்கள்,செக்கார்,ஆதிசைவர், வேளாளர், இப்படிப்பல சாதிப்பிரிவினரையும் தமது ஒப்பற்ற காவியமான பெரியபுராணத்தில் காட்டி அவர்க களை வணங்கத்தக்க நிலைக்கு கொண்டுவந்தமை சேக்கிழாரின் துணிவுதானே!

ஆண் ,பெண், பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வியறிவு, சாதி, எதையுமே கருத்தில் கொள்ளாமல் சமயம் என்பதற்குள் இவர்கள் அனைவரையும் கொண்டுவந்து ... இவர்கள் அனைவரும் இறைவனுக்குத் தொண்டுசெய்கின்ற நிலையில் போற்றப்பட வேண்டியவர் கள் என்று காட்டிய துணிச்சலால் சேக்கிழார் சிறப்பும் உயர்வும் பெற்றே நின்கிறார் எனலாம். சேக்கிழார் காலத்தில் சாதிக்கட்டுப்பாடு மிக இறுக்கமாக இருந்திருக்கிறது என்பதை அவரின் காவியத்தில் வருகின்ற அடியார்களே சான்றாகும்.தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலுக்குள் சென்று வணங்கமுடியாத நிலை காணப்பட்ட காலம். இதனைச் சேக்கிழார் மனித தர்மம் அற்றது எனக்கருதியதால்த்தான் அறுபத்துமூவரையும் இறை வன் அடியார்களாக்கிவிடுகின்றார். பெரியபுராணத்தில் வருகின்ற அடியார்கள் பல சாதி களைச் சேர்ந்த்திருந்த போதிலும் யாவரும் சிவமயமாக நின்று தொண்டையே தம் மன த்தில் இருத்திய காரணத்தால் சாதி அடிபட்டுப் போவதையே நாம் இதன் மூலம் கண்டு கொள்ள முடிகிறது. " ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சமம்" என்னும் அரிய கருத்தை அகில உலகமும் அறியச் செய்த காரணத்தால் சேக்கிழார் சிறப்புக்கும் உயர்வுக்கும் உரியவர் ஆகிறார் அல்லவா?

ஒதுக்கி வைக்கப்பட்டவர்களை இன்று கோவில்கள் தோறும் சிலைவடிவில் உள்ளே வைத்து பூசனைகள் செய்தும் , பெருவிழாஎடுத்தும் , குருபூசை என்று குறித்துக் கொண்டாடியும் வருகின்றோம் என்றால் ... அந்தப்பெருமைக்கும் சிறப்புக்கும் சேக்கிழார்தான் காரணம் என்பதை எவருமே மறந்து விடமுடியாது.

எமது சமயத்தின் தொண்டர் பற்றிக் கூறவந்தாலும் .. ஆயிரம் ஆண்டுகால தமிழ்ச்சமூகத்தின் வரலாற்றினையும்,மொழிபற்றிய நிலையும், சமயங்களின் நிலையையும் முதன்முதாலாகப் பதிவு செய்து எமக்கெல்லாம் தந்து நிற்கின்றார் சேக்கிழார் அவர்கள்.

வீரம் என்றால் பொதுவாக .... புஜபல பராக்கிரமம் கொண்டவர்களையும், பல போர் களில் வெற்றி கண்டவர்களையுமே சொல்லுவது வழக்கம்.ஆனால் சேக்கிழாரோ வீரத்துக்கும் வீரர்களுக்கும் வித்தியாசமான விளக்கத்தை அளித்து வியக்கவைகின்றார். முதலமைச்ச ராக விருந்தவர்.பல போர்களைக்கண்டவர். ஆனாலும் அவற்றில் ஈடுபட்ட வர்களை வீரர் என்றோ அவர்கள் பெற்றது வெற்றி என்றோ

(12ஆம் பக்கம் பார்க்க...)




## பக்குவமாய் காப்பியமாய் மலர்கிறதே பக்தியுடன்!

உலகில் பல் மொழியிருக்கு உயரிலக் களுமிருக்கு
அம் மொழிக்குள் எம் மொழியாம் அன்னைமொழி ஒன்றாகும்
பல் மொழிகள் இருந்தாலும் பக்தியெனும் கருதன்னை
இலக்கியமாய் இயம்பும் மொழி எம் மொழியாம் தமிழொன்றே

எம் மொழியும் சிந்திக்கா பக்தியினை பக்குவமாய்
இலக்கியத்தில் புகுத்தியது எம் மொழியின் சிறப்பாகும்
இலக்கியத்தின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆளுமைகள்
பக்தியது வரலாற்றை பயபக்தியுடன் பார்க்கின்றார்

தமிழென்று சொன்னால் சைவமும் வந்துநிற்கும்
வைணவமும் முன்வந்து வண்ணத் தமிழ்தழுவும்
நாயன்மார் வந்தார்கள் ஆழ்வார்கள் வந்தார்கள்
அவர்களால் பக்தியது இலக்கியத்துள் புகுந்தது

திருமுறைகள் வந்தன திவ்வியப்பிரவந்தமும் வந்தது
அருணகிரி தமிழ்த்தேனும் ஆனந்தமாய் கலந்தது
தெய்வமாக் கதையெல்லாம் சிறப்பாக வந்தன
சிறப்புடைக் காப்பியங்கள் பக்தியாய் மலர்ந்தன

இத்தனையும் பக்திக்குச் சொத்தாக அமைந்தன
தமிழல்லா வேறுமொழி பக்திபக்கம் பார்க்கவில்லை
பக்திசொன்ன எங்கள் மொழி முந்தியங்கே நின்றது
பார்போற்ற தமிழ் மொழியும் ஒளிவிட்டு நிற்கிறது

பக்திச் சுவையெடுத்து பலபேரின் மனமமர
முத்தான தமிழெடுத்தார் முதல்வனை மனமெண்ணி
உலகெலா மெனுமடியை உமைபாகன் காட்டிவிட
நிலவுலகம் நிலைபெறவே சேக்கிழார் வழிசமைத்தார்

அடியார்கள் பெருவாழ்வை அவர்பாட எடுத்தவிதம்
அன்னைத் தமிழிக்கு அளித்திட்ட பெருங் கொடையே
பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியகாரணத்தால்
பரமனும் ஏற்றிட்டார் பசுந்தமிழும் செழித்தது

சேக்கிழார் மாக்கதையில் பலவடியார் வருகின்றார்
ஒவ் வொருவர் பக்தியும் உணர்வுநிலை வேறாகும்
பக்தியெனும் பாதையிலே வருமடியார் பக்குவத்தை
சித்தமதி லிருத்துவதற்கு சேக்கிழார் செய்துள்ளார்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# சாய்ந்தமருது ஜி.எம்.எம்.எஸ். பாடசாலையில் மூன்று மாடி கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டல்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் மூன்று மாடி கட்டட விஸ்தரிப்புக்கான அடிக்கல் நாட்டும் விழா திங்கட்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை அபிவிருத்திக் குழு தலைவருமான எஸ்.எம்.எம் முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். சஹ்துல் நஜீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை பிரதிக் கல்வி பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளருமான எம். எச்.எம். ஜாபீர் நிகழ்வில் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்ததோடு, பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ. எம். ரியாஸ், பாடசாலையின் பிரதி அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் அபிவிருத்திச் சங்க நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மௌலவி ஏ.கே.எம். சமீர் பலாஹியால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் வருகை தந்த அனைத்து அதிதிகளுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். சென். சாள்ஸ் ம.விக்கு சிமார்ட் வகுப்பறை கையளிப்பு



நவீன உலகின் வளமான டிஜிற்றல் எதிர்காலத்திற்காக இந் நாட்டின் இளைய தலைமுறையை தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற ஸ்மார்ட் கணினி பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் சக்வச என்ற செயற்றிட்டத்தின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வருகை ஞாயிற்றுக்கிழமை சென் சார்ல்ஸ் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் உமா சந்திர பிரகாஷ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

5 கணினிகளும், 1அச்சுப்பொறியும், சிமாட் போட்டும் வழங்கப்பட்டதோடு புதிய ஸ்மார்ட் வகுப்பறையும் திறந்து வைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முதலில் சஜித் பிரேமதாஸவால் மங்கள விளக்கேற்றல் இடம்பெற்றதோடு அதனை அடுத்து தொடர்ந்தும் பாடசாலை மாணவிகளால் வரவேற்பு நடனம் இடம்பெற்றதோடு, பாடசாலை மாணவியால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்தும் பாடசாலை அதிபர் லயன் கு.லெனின்குமாரால் உரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்தும் கிருபாகரன் அவர்களாலும் உரை நிகழ்த்தப்பட்டதோடு, பாடசாலை அதிபர் அவரால் சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் உரை நிகழ்த்தப்பட்டது.

அந்த உரையின் போது தினமும் ஆங்கில மொழியைக் கற்குமாறும் அதனை கற்பதற்கான வழிமுறைகளும் சஜித் பிரேமதாஸவால் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டதோடு, குறித்த பாடசாலைக்கான இரட்டை மாடிக் கட்டடம் மற்றும் அரங்கும் அமைத்துத்தரப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

தொடர்ந்தும் சஜித் பிரேமதாஸவால் மாணவர்களுக்கு 5 அகராதிகள் வழங்கப்பட்டதோடு,நடனம் தொடர்பான ஆடை அணிகலன்களுக்காக ஒரு மில்லியன் ஷரூபா நிதியும் கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் லயன் லெனின்குமார் தனது உரையின் போது -

மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கு தேவையான டிஜிற்றல் உபகரணங்களை பெற்றுத்தந்த எதிர்க்கட்சித் தலைவருக்கும், அவ் உபகரணங்களை பெற்றுக்கொள்ள துணையாக இருந்த கிருபாகரன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்ததோடு, மேலும் பாடசாலையில் பௌதிக வள பற்றாக்குறை நிலவுவதாகவும் அதனை நிவர்த்தி செய்து தருமாறும் பாடசாலை அதிபர் அவர்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. (05)

# வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரிக்கும் ஸ்மார்ட் வகுப்பறை சஜித்தால் கையளிப்பு

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரிக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் ஸ்மார்ட் வகுப்பறை உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரிக்கு சென்று 11 லட்சத்து 77 ஆயிரம் ஷரூபா பெறுமதியான உபகரணங்களுடன் ஸ்மார்ட் வகுப்பறையை கையளித்ததோடு, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு லட்சம் ஷரூபாய் நிதி உதவியையும் வழங்கிவைத்தார். (05)

# பக்தியினூடாகச் சமுதாயச் சீர்திருத்த கருத்துக்களை .........

“ பக்திச் சுவை நனி சொட்ட சொட்ட “ பாடியதால் சேக்கிழார் சிறப்புப் பெறுகிறாரா? புதிய உத்தியைக் கையாண்டதால் சேக்கிழார் உயர்ச்சி பெறுகின்றாரா? முதலமைச்சர் ஆகவிருந்தமையால் சிறப்புப் பெறுகின்றாரா?புரட்சிகரமான கருத்துக்களை முன் வைத் தமையால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா?அல்லது பெரியபுராணத்தைத் தந்தமை யால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா? என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா ?

பேரரசு உருவாகி அந்தப்பேரரசுக்கு புகழ்மாலைகள் பெருகும் பொழுது ஆட்சியாள ர்கள் தம்மை மறப்பது இயல்புதான். ஆனால் இந்தநிலையைத் தொடரவிட்டால் குறிக்கோள்கள் இல்லாமலே கெட்டழிந்தும் போய்விடலாம்.போர் வெற்றியாலும், அதனால் ஏற்ப டும் பேராசையினாலும் அந்தப்பேரரசு தன்னை ஒருநாளும் தழர்வடையச் செய்யும்படி நடந்து கொள்ளவும் கூடாது.ஆனால் இதனை எந்தவொரு அரசும் நோக்கியதாகத்தெரி யவில்லை.தளர்வுறும் வேளை அந்த நாட்டுமக்களையும் அப்போது உள்ள அரசர்களையும் நல்வழிப்படுத்துதல் மிகவும் முக்கியமானதாகும்.இதனை முதலமைச்சராக இருந்த அனுபவம் மிக்க சேக்கிழார் தம்வசம் எடுத்துக்கொண்டார். இதனால் பெரியபுராணம் பிறந்தது எனலாம்.

பிற்காலச் சோழமன்னரது போக்கை சேக்கிழார் விரும்பவில்லை.அவர்களின் மனோபாபம் வேறுவிதமாகப் போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு நல்ல வழியைக் காட்டினால்த்தான் மக்களும் நாடும் மீண்டும் பழைய நிலைய அடையமுடியும் என்று கருதினார். எனவே மன்னர் மனம்மாற, மக்கள் விழிப்புப்பெற ,அவர்கையாண்டவழிதான்--- ஆண்டவன் அடியாரை அறிமுகப் படுத்தும் அதி உன்னத பணியான பெரியபுராணமாக அமைந்தது.” குடிஉயரக் கோனுயர்வான் “ இதை நன்கு அறிந்தவராகச் சேக்கிழார் இருந்தபடியால் குடிகள் உயர்வுபெற வேண்டுமானால் கோன் -- அதாவது அரசர்களை உயிர்ப்பூண்டவேண்டும் என எண்ணினார். அதனால் மன் னர்மனத்தில் இறையுணர்வை ஊட்டுவதே மிகச்சிறந்தவழி என்று அதனை மையமாகக் கொண்டு சுவைபட ஒருகாவியத்தை ஆக்கினார்.

மந்திரிகள் என்றாலே ஊழலும் , பித்தலாட்டமும் , நேர்மையீனமும், ஏமாற்றுத லும்தான் எங்களுககெல்லாம் தற்போது ஞாபகத்துக்கு வரும் அந்த அளவுக்கு மந்திரி கள் நிலை இருக்கிறது.ஆனால் சேக்கி ழாரே மன்னனையும் மக்களையும் நல்வழிப்படு த்துவதற்காக அந்தஸ்த்தும் அதிகாரமும் மிக்க முதலமைச்சர் பதவியினையே துறந்து விடுகின்றார்.அதிகாரத்தில் இருந்து ஆண்டவன் புகழ் பாட அவர்விரும்பவில்லை. இதனால்த்தான் அவர் வாயினினின்றும் “ கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் --------

ஓடும் செம்பொனும் ஒக்க நோக்குவார் “ என்று வரிகள் வந்தனபோலும்.

சேக்கிழாரின் புலமை சாதாரணமானதல்ல. கம்பரைப்போல கவிபாடும் ஆற்றல் மிக்கவர்.அவர்மட்டும் வேறுதுறையில் காவியம் பாடியிருந்திருந்தால் சில வேளை கம்பராமாயணத்தைக்கூட விஞ்சியியும் இருந்திருக்க வாய்ப்பும் உண்டு.ஆனால் அவர் நோக்கம் அதுவல்ல.அதனால்த்தான் அடியார்கள் வரலாற்றைத் தேடிப் பிடித்து அதனை எப்படிக் கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுத்து நின்றார்.

சேக்கிழார் காவியம் பாடுவதற்கு எடுத்துக்கொண்ட பொருள் வித்தியாசமான தாகும்.சிலம்புமட்டுமே உயர்திணை அல்லா ஒன்றை பாடுபொருளாகக் கொண்டிருந்தது அதனை மனத்திற்கொண்ட காரணத்தால் சேக்கிழாரும் “ தொண்டை “ கருப்பொருளாக வைத்துத் தனது காவியத்தை படைத்து விடுகின்றார்.அறுபத்துமூன்று அடியவர் கதைகளைவைத்துக்கொண்டு ஒருகாவியத்தைப் புனைவது என்பது இலகுவான காரியமல்ல. இதனை நன்கு மனத்திற் கொண்ட காரணத்தால் எப்படியும் இந்த அடியார்களை இணை ப்பதற்கு ஒரு மார்க்கம் கிடைக்காதா என்று சிந்தித்த பொழுதுதான்........ அடியார்கள் எவ் வாறு இருப்பினும் அவர்கள் யாவரி டமும் தொண்டுமனப்பாங்கு இருப்பதை அவரால் புரிந்து கொள்ளமுடிந்தது எனலாம்.எனவே இப்பொழுது அடியார்கள் தொகை அவருக்கு ப்பெரிதாகப்படவில்லை. அங்கே தொண்டுதான் தலைமை வகித்தது. எனவே தொண் டை மையமாக வைத்து தொண்டர் பெருமையை பறைசாற்றும் காவியத்தை எழிதாகப் புனைந்து எமக்கு அளித்து விட்டார். இது சேக்கிழாரின் பெருமைதானே!

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், நம்பியும், பெரியபுராணம் பாட சேக்கிழாருக்கு பெரிதும் உதவிய போதும் ..... சேக்கிழார் அவற்றோடு மட்டும் நின்றுவிடாமல் , அடியார்கள் பற் றிய விஷயங்களை யெல்லாம் ஆதாரத்துடன் எடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தால் ஊர்கள் தோறும் சென்று பல தகவல்களையும் எடுத்துக்கொள்கின்றார். அமைச்சராக இருந்த காரணத்தால் அவர் ஊர்கள் தோறும் சென்று பல வரலாற்றுத்தகவல்களையும்

கல்வெட்டுப் போன்றவற்றையும் ஆராயும் நுண்மாண் நுழைபுலத்தைத் தன்னகத்தே கொண்டவராக விளங்கினார்.இதனால் அவரின் காவியமான பெரியபுராணம் தலை நிமிர்ந்து நிற்கின்றது.இது அவருக்கு உயர்வையும் சிறப்பையும் தராமல் இருக்கத்தான் முடியுமா?

பக்தியை ஊட்டுவதற்குப் பெரியபுராணத்தைச் சேக்கிகிழார் பயன்படுத்தினாலும் அதன் ஊடாக பல சமூக சீர்திருத்தங்களையும் துணிந்து செய்ய நினைக்கின்றார் . இது அவரின் சமூக அக்கறையினையே காட்டுகி றது எனலாம். பலவிஷயங்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்ற காரணத்தால்த்தான் சோழமன்னனே அவருக்கு முதல் அமைச்சர் பதவி வழங்கி பெருமைப்படுத்துகின்றான். ஆட்சியில் அதிகாரத்தில் இருந்து வேலை பார்த்தவருக்கு நாட்டின் நிலை அங்கு வாழும் மக்களின் நிலை பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தது. தனக்குக் கிடைத்தை அனுபவங்களின் வெளிப்பா டாக பெரியபுராணத்தில்..... அவரின் சமூக அக்கறையாக வந்துநிற்கிறது எனலாம்.

பெரியபுராணத்தில் இடம்பெறுகின்ற அடியவர்கள் யாவரும் வெவ்வேறு சமூக நிலையில் இருந்து வந்தவர்கள். அந்தணர், அரசர், புலையர் , வேட்டுவர், மீன்பிடிகாரர் வண்ணார், குயவர், மரமேறுபவர்கள்,செக்கார்,ஆதிசைவர், வேளாளர், இப்படிப்பல சாதிப்பிரிவினரையும் தமது ஒப்பற்ற காவியமான பெரியபுராணத்தில் காட்டி அவர்க களை வணங்கத்தக்க நிலைக்கு கொண்டுவந்தமை சேக்கிழாரின் துணிவுதானே!

ஆண் ,பெண், பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வியறிவு, சாதி, எதையுமே கருத்தில் கொள்ளாமல் சமயம் என்பதற்குள் இவர்கள் அனைவரையும் கொண்டுவந்து ... இவர்கள் அனைவரும் இறைவனுக்குத் தொண்டு-




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.06.2024இல் வெளியிடப்பெற்றது